[2015 செப்டம்பர் 21

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 306, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**306—**

**மாவட்ட முக்கிய சாலையைச் சீரமைத்தல்**

***58335-திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, அன்னலக்ரகாரம்–கொருக்கை–மருதாநல்லூர் மாவட்ட முக்கிய சாலை எண் 832–ஐ அகலப்படுத்தி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

கும்பகோணம் தொகுதி, அன்னலக்ரகாரம்–கொருக்கை–மருதாநல்லூர் மாவட்ட முக்கிய சாலை எண் 832–ல் காலமுறை புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10–35

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதி, மருதாநல்லூர், அன்னலக்ராரம், எம்.டி.ஆர். 832, சுமார் 5.2

2015 செப்டம்பர் 21]

கிலோ மீட்டர் நீளமும், 5.5 மீட்டர் அகலமும் கொண்டது. இச்சாலையானது கும்பகோணம், மன்னார்குடி, அதிராம்பட்டினம் SH-66 சாலையில் மருதாநல்லூர் 0/0 கிலோ மீட்டர் தொடங்கி, நந்திவனம், கொருக்கை ஊராட்சி, வி.ஜி.பி. நகர், வடசாமி நகர், காந்தி நகர், கற்பக விநாயக நகர், காளிமுத்து நகர், பாரதிதாசன் நகர், கூட்டுறவு நகர், வீட்டு வசதி வாரிய நகர், வாரியார் நகர், கணேசர் நகர், பெரியசாமி நகர் வழியாக, குறிப்பாக அரசு பெண்கள் கல்லூரியைக் கடந்து, உலகச் சிறப்பு வாய்ந்த மகாமகம் குளம் மேல் கரை வரை சென்று, நகராட்சிச் சாலையில் முடிவடைகிறது. இப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் கும்பகோணம் நகருக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், குடந்தையிலிருந்து அந்தப் பகுதி விரிவாக்கம் அடைந்திருக்கின்றது. எனவே, Passenger Car Unit எனப்படுகின்ற வாகனப் போக்குவரத்துச் செறிவுமிக்க இந்தச் சாலையையும், இந்தச் சாலையிலுள்ள அனைத்து சிறு பாலங்களையும் அகலப்படுத்த வேண்டியது அவசியம். எனவே, மாவட்டப் பெரும் சாலைகளாக அகலப்படுத்தும் விதிகளைத் தளர்த்தி, சிறப்பினமாக, மகாமகம் குளத்தினை இணைக்கின்ற இந்த 5.5 மீட்டர் அகலமுள்ள சாலையை 7 மீட்டர் சாலையாக அகலப்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம், மன்னார்குடி, அதிராம்பட்டினம் மாவட்ட நெடுஞ்சாலையில் கிலோ மீட்டர் 5/8-ல் வலதுபுறம் பிரிந்து, மருதாநல்லூர், கொருக்கை வழியாக அண்ணலக்ரகாரத்திற்குச் செல்கின்ற சாலையின் மொத்த நீளம் 5.2 கிலோ மீட்டராகும். இச்சாலை மாவட்ட முக்கியச் சாலையாகும். 5.50 மீட்டர் அகலம் கொண்ட இச்சாலை இடைவழித் தடமாக, போக்குவரத்துச் செறிவுக்கு ஏற்ப உள்ளது. போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கின்றபொழுது, நிதிநிலைக்கு ஏற்ப அதனை அகலப்படுத்த அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதாநல்லூர், அண்ணலக்ரகாரம், எம்டி.ஆர். 832 தொடங்குகின்ற கும்பகோணம், மன்னார்குடி, அதிராம்பட்டினம் SH 66 சாலையில், கிலோ மீட்டர் 7/4—ல் திப்பராஜபுரத்தில் உள்ள திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகள் சேர்ந்து பராமரிக்கும் ரெகுலேட்டருடன் இணைந்த பாலம் சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்னால் பழைய ஆர்ச் பாலமாகக் கட்டப்பட்டு இருந்துகொண்டிருக்கிறது. அது பழுதடைந்து, தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்டு, தற்போது வாகனப் போக்குவரத்து நடைபெறுகின்றது. இந்தப் பாலம் நிரந்தரமாக உடைந்துவிட்டால், தஞ்சை மாவட்டத்தினுடைய தென் பகுதிகளான மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், இராமேஸ்வரம் செல்வதற்கும், குடவாசல், கொரடாச்சேரி, நீடாமங்கலம் வழியாகச் சென்னை செல்வதற்கும் சுமார் 40 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டிய நிலைதான் இருக்கும். இந்த நிலையை மாற்றிட, மிகவும் இன்றியமையாத இந்தப் பாலத்தினை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகத் திரும்பக் கட்டுவதற்கும், மருதாநல்லூர், அண்ணலக்ரகாரம் சாலையில் கிலோ மீட்டர் 4/10—ல் அண்ணலக்ரகாரம் மாற்று இரயில்வே கேட் எல்.சி. 270 பகுதியில் ஓர் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பாலம் வலுவிழந்து இருப்பதாகவும், அதற்கு மாற்றுப் பாலம் வேண்டும் என்றும் இங்கே கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், 2011–2012 ஆம் ஆண்டு*

நபார்டு திட்டத்தின் மூலமாகப் பல்வேறு அலகுகளின் மூலமாக 367 பாலங்களும், 2012–2013-ல் 317 பாலங்களும், 2013–2014-ல் 305 பாலங்களும், 2014–2015-ல் 297 பாலங்களும், ஆகமொத்தம் 1,286 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரயில்வே மேம்பாலங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இரயில்வே மேம்பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால், 24 மணி நேரம், அதாவது ஒரு நாளைக்கு, அந்த இரயில்வே பாதையில் செல்கின்ற இரயில்களினுடைய எண்ணிக்கை, இரயில் செல்கின்றபொழுது கடவுகளின் இருபுறமும் செல்கின்ற வாகனங்களினுடைய எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கிட்டு, அதற்கு புள்ளியியல் கொடுத்து, ஒரு இலட்சம் இரயில்வே அலகுகள் இருக்கும்பட்சத்தில், அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கின்றது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இரயில்வே கடவின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்து, ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்கு மேல் இருக்குமானால், அங்கே இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட திங்கள் நகர், இரணியல் சாலை அமைக்கப்பட்டு சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்தச் சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. வாகனங்களை ஓட்டிச் செல்வதற்கு வசதி இல்லை; நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அதை விரிவுபடுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10—40

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சாலைகள் எடுக்கப்பட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இதுவரை 41 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் சீர் செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தச் சாலையை ஆய்வு செய்து, சீர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 307, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**307—**

**அங்கன்வாடிக் கட்டடம்**

***58872–திரு. சு. ரவி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மிட்டப்பேட்டை ஊராட்சி, மிட்டப்பேட்டையிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மிட்டப்பேட்டையிலுள்ள அங்கன்வாடி மையம் 1984 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது.